பொருளடக்கம்

❀

குகைவாசிகள் கொள்கைப் பாதை 8

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 15

1 தொழுகை விசயத்தில் முஸ்லிம் மீதுள்ள கடமைகள் 17

1. மரணத்தை நினைவுகூர்தல் 21

2. தொழுகையுடன் தொடர்புள்ள வார்த்தைகளின் கருத்துக்களில் சிந்தனையைச் செலுத்துவது 25

3. பாவங்கள், மாறுபாடுகள், குற்றங்கள் எல்லாவற்றையும் விட்டுவிடுவது 26

4. அதிகமாகச் சிரிப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்; அது உள்ளத்தையும் உள்ளச்சத்தையும் மரணிக்கச் செய்வதாகும் 28

5. பொருத்தமான வேலையைத் தேர்வு செய்துகொள்வது 28

6. இவ்வுலகக் காரியங்களில் கூடுதலாக ஈடுபடுவதைத் தவிர்ப்பது 29

7. திருக்குர்ஆன் ஆதாரப்பூர்வமாக வந்துள்ள திக்ருகள், துஆக்கள் மற்றும் மனதைப் பண்படுத்தக்கூடிய விசயங்கள் ஆகியவற்றை அதிகமாக ஓதுவது 30

8. தொழுகைக்குச் சீக்கிரமாகச் சென்றுவிடுவது 30

9. தொழுகை வரிசைகள் இணைந்திருப்பதும் ஒழுங்குடன் இருப்பதும் 31

2 குற்றங்களுக்கும் தீமைகளுக்கும் தொழுகை பரிகாரமாக அமைவது அதன் சிறப்பு 42

3 தொழுகையும் பாவங்களை விடுதல் மனதைப் பக்குவப்படுத்துதல் ஆகியவற்றில் அதன் தாக்கமும் 54

4 உள்ளச்சமும்அழகிய முறையில் தொழுவதும் அதன் நற்கூலியும் 59

5 இரவுத்தொழுகையின் சிறப்பு, இறைநம்பிக்கை அதிகரிப்பதில் அதன் தாக்கம் 62

6 இரவுத்தொழுகை குறித்து தம்பதியர் ஒருவருக்கொருவர் அறிவுறுத்துவது 73

7 தொழுகைகளிலே அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானது 74

8 தொழுகையில் இருக்கும் தன் அடியானை அல்லாஹ் தன் முகத்தினால் முன்னோக்குகிறான் 75

9 தொழுகை மூலம் உதவி தேடுதல் 76

10 வாழ்க்கை காரியங்களுடன் தொழுகையின் தொடர்பு 78

ளுஹா எனும் முற்பகல் தொழுகையைப் பொறுத்தவரை அதில் இறைநம்பிக்கை அதிகரித்தலும் அல்லாஹ்விடத்தில் மகத்தான கூலியும் உள்ளது. 82

11 பலவீனர்களின் தொழுகையும் சமுதாயத்தின் வெற்றியில் அதன் தொடர்பும் 86

12 தொழுகையில் சுகமும் நிம்மதியும் உள்ளது 87

தொழுகை முழுவதுமே இறைநினைவும் பிரார்த்தனையாகவும்தான் உள்ளது 87

13 நபியவர்கள் மரணப்படுக்கையில் இருந்தபோது நடந்தது என்ன? 89

பாடங்களும் படிப்பினைகளும் 91

14 அல்லாஹ் தொழுகையை நிலைநாட்டுவதற்கும் ஸகாத்தை கொடுப்பதற்குமே செல்வத்தை அருளியுள்ளான் 93

15 தொழுகையை விடுபவர் 97

16 ஒரு தொழுகை தவறிப்போனவரின் நிலை செல்வத்திலும் குடும்பத்திலும் குறைவு ஏற்பட்டவரின் நிலை போன்றது 98

17 தொழுகையில் உள்ளச்சம் ஏற்படுவதற்கான பயிற்சி 100

18 உள்ளச்சத்தின் தடைகற்கள் 102

19 முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய தகவல்கள் 107

20 குறிப்பிட்ட மஸ்ஜிதுகளில் தொழுவதின் சிறப்பு 114

21 பள்ளிவாசல்களுக்கு நடந்து செல்வதின் சிறப்பு 116

மேற்கண்ட நபிமொழிகளில் கிடைக்கும் கருத்துக்கள் 121

பள்ளிவாசல்கள்மீது பற்று கொண்டிருப்பது அவற்றிலே அமர்ந்திருப்பது ஆகியவற்றின் சிறப்பு 122

22 ஜமாஅத்தைப் புறக்கணிப்பது குறித்த கடும் எச்சரிக்கை; அதனால் ஈமானில் குறைவு ஏற்படும் 125

தொழுகைக்கு முன்கூட்டியே செல்வதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? 126

ஒரு தொழுகைக்குப் பின் மறுதொழுகையை எதிர்பார்த்திருப்பதின் சிறப்பு 128

மேற்கண்ட ஹதீஸ்களில் கிடைக்கும் செய்திகள் 133

உள்ளச்சத்துடன் தொழுவதால் விளையும் பலன்கள் 134

23 முடிவுரை 136

1

தொழுகை விசயத்தில் முஸ்லிம் மீதுள்ள கடமைகள்

❀

முஸ்லிமின் இறைநம்பிக்கையை அதிகரிக்கக்கூடியவற்றில் மிக பலமான ஒன்று தொழுகை ஆகும். அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا كَانَ اللَّهُ لِيُضِيعَ إِيمَانَكُمْ

அல்லாஹ் உங்கள் ஈமானை (இறைநம்பிக்கையை) வீணாக்கு பவனாக இல்லை. (குர்ஆன் 2:143)

இங்கு அல்லாஹ் ஈமான் என்று குறிப்பிடுவது கிப்லா மாற்றத் திற்கு முன்பு பைத்துல் மக்திஸை முன்னோக்கித் தொழுதத் தொழுகையைத்தான். நபிமொழியில் இடம்பெறுவதாவது:

آمُرُكُمْ بِأَرْبَعٍ وَأَنْهَاكُمْ عَنْ أَرْبَعٍ آمُرُكُمْ بِالْإِيمَانِ بِاللهِ وَحْدَهُ أَتَدْرُونَ مَا الْإِيمَانُ بِاللهِ شَهَادَةُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَإِقَامُ الصَّلَاةِ، وَإِيتَاءُ الزَّكَاةِ وَصَوْمُ رَمَضَانَ وَأَنْ تُعْطُوا مِنَ الْغَنَائِمِ الْخُمُسَ وَأَنْهَاكُمْ عَنْ أَرْبَعٍ عَنِ الدُّبَّاءِ وَالْحَنْتَمِ وَالنَّقِيرِ وَالْمُزَفَّتِ

உங்களுக்கு நான் நான்கு விசயங்களைக் கட்டளையிடுகிறேன்:

1. அல்லாஹ்வின்மீது நம்பிக்கைகொள்வது. அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை என்பது என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறெவருமில்லை என்று உறுதி கூறுவதே (அது).
2. தொழுகையை நிலைநிறுத்துவது.
3. ஸகாத் வழங்குவது.
4. றமளான் மாதம் நோன்பு நோற்பது.

மேலும், போர்ச் செல்வங்களில் ஐந்திலொரு பங்கை (அரசுக்குச்) செலுத்தும் படியும் (உங்களுக்கு) கட்டளையிடுகிறேன். நான்கு

إِنْ أَرَدْتَ تَلْيِينَ قَلْبِكَ فَأَطْعِمْ الْمَسَاكِينَ وَامْسَحْ رَأْسَ الْيَتِيمِ

நீ உன் உள்ளத்தை மென்மைப்படுத்த விரும்பினால், ஏழைக்கு உணவு கொடு; அநாதையின் தலையைத் தடவு. (அறிவிப்பு: அபூ தர்தாஃ ﷺ, அஹ்மது 7566, ஸஹீஹா 854)

4. அதிகமாகச் சிரிப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்; அது உள்ளத்தையும் உள்ளச்சத்தையும் மரணிக்கச் செய்வதாகும்

ஒரு நபிமொழியில் கீழ்வருமாறு இடம்பெறுகிறது:

وَلَا تُكْثِرِ الضَّحِكَ فَإِنَّ كَثْرَةَ الضَّحِكِ تُمِيتُ الْقَلْبَ

அதிகமாகச் சிரிக்காதீர். ஏனெனில், அதிகமாகச் சிரிப்பது உள்ளத்தை மரணிக்கச் செய்யக்கூடியதாகும். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ﷺ, திர்மிதீ 2305, ஸஹீஹா 930)

5. பொருத்தமான வேலையைத் தேர்வு செய்துகொள்வது

இது பல விதங்களில் அமையும்

1. *ஹலாலாக (அனுமதிக்கப்பட்டதாக) இருப்பது.* ஏனென்றால், அல்லாஹ் தூய்மையானதைத் தவிர வேறு எதையும் ஏற்றுக் கொள்வதில்லை. ஹறாமான (தடை செய்யப்பட்ட) செல்வத்தை உண்பவன் பிரார்த்தனை அங்கீகரிக்கப் படாதவனாகவும் உள்ளச்சம் இல்லாமலாக்கப் பட்டவனாகவும் இருப்பான்.

2. இந்த வேலை தொழுகை நேரங்களுக்கு முரண்படக்கூடியதாக இருக்கக் கூடாது. ஏனென்றால், வேலை அவ்வாறு இருந்தால் தொழுகைகளை பிற்படுத்துவது ஆகுமானது என்றோ அல்லது தொழுகைகளின் நேரங்கள் தப்பிவிட்டால் கழா செய்து கொள்ளலாம் என்றோ மனிதன் தனக்குத் தானே ஃபத்வா (மார்க்கத் தீர்ப்பு) கொடுத்துக் கொள்ள ஆரம்பித்துவிடுவான். குறைந்தபட்சம் தொழுகையில் தான் செய்யும் குறையாவது சரிகாண்பான் அல்லது இத்தகைய ஃபத்வாவை தனக்கு யாராவது தருவாரா என்று தேட ஆரம்பித்துவிடுவான்.

3. அதிக உடல் சிரமத்தை கொடுக்காத வேலையை இயன்ற அளவு தேடிக் கொள்ள வேண்டும். அதுதான் தொழுகைக்குள் நுழையும்போது இறைவனிடம் மீளக்கூடிய உள்ளச்சமுள்ள

7. திருக்குர்ஆன் ஆதாரப்பூர்வமாக வந்துள்ள திக்ருகள், துஆக்கள் மற்றும் மனதைப் பண்படுத்தக்கூடிய விசயங்கள் ஆகியவற்றை அதிகமாக ஓதுவது

ஏனென்றால், இவையெல்லாம் உள்ளத்தை மிருதுவாக்கும்; ஷைத்தானைத் தூரமாக்கும்.

8. தொழுகைக்குச் சீக்கிரமாகச் சென்றுவிடுவது

தாமதமாகிவிட்டால் தொழுகையை அடைந்துவிட வேண்டும் என்ற ஆர்வம் ஓடிச் செல்வதற்குத் தூண்டும். அப்படி ஓடிச்சென்று தொழுகையினுள் நுழைந்தால், ஏனோதானோ என்று தொழுகையை ஆரம்பித்த நிலை ஏற்படுத்தும். இவ்வாறு நடைபெறக் கூடாது என்பதால் சீக்கிரமாகச் சென்றுவிட வேண்டும். அபூ கத்தாதா ﵁ அவர்கள் கூறியது இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِذَا أَتَيْتُمُ الصَّلاَةَ فَعَلَيْكُمْ بِالسَّكِينَةِ فَمَا أَدْرَكْتُمْ فَصَلُّوا وَمَا سُبِقْتُمْ فَأَتِمُّوا

நீங்கள் தொழுகைக்கு வரும்போது அமைதியான முறையில் வாருங்கள். உங்களுக்குக் கிடைத்த ரக்அத்தை (ஜமாஅத்துடன்) தொழுங்கள். உங்களுக்குத் தவறிப்போனதைப் பூர்த்தி செய்யுங்கள். (புகாரீ 635 முஸ்லிம் 603)

அபூ ஹுறைறா ﵁ அவர்கள் கூறியது, அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِذَا ثُوِّبَ لِلصَّلَاةِ فَلَا تَأْتُوهَا وَأَنْتُمْ تَسْعَوْنَ وَأْتُوهَا وَعَلَيْكُمُ السَّكِينَةُ فَمَا أَدْرَكْتُمْ فَصَلُّوا وَمَا فَاتَكُمْ فَأَتِمُّوا فَإِنَّ أَحَدَكُمْ إِذَا كَانَ يَعْمِدُ إِلَى الصَّلَاةِ فَهُوَ فِي صَلَاةٍ

தொழுகைக்கு இகாமத் சொல்லப்பட்டால், அதற்கு ஓடி வராதீர்கள். அமைதியைக் கடைப்பிடித்தவர்களாக வாருங்கள். உங்களுக்குக் கிடைத்த ரக்அத்தை (ஜமாஅத்துடன்) தொழுங்கள். உங்களுக்குத் தவறிப் போனதைப் பூர்த்தி செய்யுங்கள். ஏனெனில், உங்களில் ஒருவர் தொழுகைக்குச் செல்லும்போது தொழுகையில்தான் இருக்கிறார். (முஸ்லிம் 602)

2

குற்றங்களுக்கும் தீமைகளுக்கும் தொழுகை பரிகாரமாக அமைவது அதன் சிறப்பு

❀

1. அபூ ஹுறைறா ﵁ அவர்கள் கூறியது:

أَرَأَيْتُمْ لَوْ أَنَّ نَهَرًا بِبَابِ أَحَدِكُمْ يَغْتَسِلُ كُلَّ يَوْمٍ خَمْسَ مَرَّاتٍ مَاذَا تَقُولُونَ ذَلِكَ مُبْقِيًا مِنْ دَرَنِهِ قَالُوا لاَ يُبْقِي مِنْ دَرَنِهِ قَالَ فَذَلِكَ مَثَلُ الصَّلَوَاتِ الْخَمْسِ يَمْحُو اللهُ بِهِنَّ الْخَطَايَا

உங்களில் ஒருவரின் வாசலில் ஆறு ஒன்று (ஓடிக் கொண்டு) இருக்கிறது. அதில் அவர் தினமும் ஐந்து முறை குளிக்கிறார், அவருடைய மேனியிலுள்ள அழுக்குகளில் எதுவும் எஞ்சியிருக்குமோ என்று கூறுங்கள் என்று (தோழர்களிடம்) அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கேட்டார்கள். அவரின் அழுக்குகளில் சிறிதளவும் எஞ்சியிராது என நபித்தோழர்கள் கூறினர். இது ஐவேளைத் தொழுகையின் உவமையாகும். இவற்றின் மூலம் அல்லாஹ் பாவங்களை அகற்றுகிறான் என்று இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள். *(புகாரீ 528, முஸ்லிம் 667)*

2. அபூ ஹுறைறா ﵁ அவர்கள் அறிவித்தது அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

الصَّلَاةُ الْخَمْسُ وَالْجُمْعَةُ إِلَى الْجُمْعَةِ كَفَّارَةٌ لِمَا بَيْنَهُنَّ مَا لَمْ تُغْشَ الْكَبَائِرُ

ஐவேளைத் தொழுகைகள், ஓர் ஜுமுஆ முதல் மறு ஜுமுஆ வரை, இவற்றுக்கு இடைப்பட்ட நேரத்தில் நடக்கும் தவறுகளுக்குப் பரிகாரங்களாகும்; பெரும்பாவங்கள் செய்யப்படாமல் இருந்தால். *(முஸ்லிம் 233)*

3. அபூ ஸயீது அல்குர்ரீ ﵁ அவர்கள் அறிவித்தது,

الصَّلَوَاتُ الْخَمْسُ كَفَّارَاتٌ مَا بَيْنَهُمَا وقَالَ رَسُولُ اللهِ صَلى الله عَليهِ وسَلم أَرَأَيْتُمْ لَوْ أَنَّ رَجُلا كَانَ لَهُ مُعْتَمَلٌ، بَيْنَ مَنْزِلِهِ ومُعْتَمَلِهِ خَمْسَةُ أَنْهَارٍ فإِذَا انْطَلَقَ إِلَى مُعْتَمَلِهِ عَمِلَ مَا شَاءَ

4

உள்ளச்சமும்அழகிய முறையில் தொழுவதும் அதன் நற்கூலியும்

❀

1. உக்பா இப்னு ஆமிர் ﵁ அவர்கள் கூறியது, அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

مَا مِنْ أَحَدٍ يَتَوَضَّأُ فَيُحْسِنُ الْوُضُوءَ وَيُصَلِّي رَكْعَتَيْنِ يُقْبِلُ بِقَلْبِهِوَوَجْهِهِ عَلَيْهِمَا إِلَّا وَجَبَتْ لَهُ الْجَنَّةُ

ஒருவர் அழகிய முறையில் வுளூ செய்து, இரண்டு ரக்அத்துகள் தொழுகிறார். அவ்விரண்டு ரக்அத்திலும் தன் இதயத்தினாலும் முகத்தினாலும் முழு ஈடுபாடு காட்டுகிறார் என்றால் அவருக்குச் சொர்க்கம் கட்டாயமாகாமல் இருப்பதில்லை. *(முஸ்லிம் 234)*

2. ஸைது இப்னு காலித் அல்ஜுஹ்னி ﵁ அவர்கள் அறிவித்தது, அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

مَنْ تَوَضَّأَ فَأَحْسَنَ وُضُوءَهُ ثُمَّ صَلَّى رَكْعَتَيْنِ لَا يَسْهُو فِيهِمَاغُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ

ஒருவர் அழகிய முறையில் வுளூ செய்து, பிறகு இரண்டு ரக்அத்துகள் தொழுகிறார். அவ்விரண்டிலும் எதையும் மறக்கவில்லை. இவ்வாறு அவர் தொழுது முடித்தால், அவருடைய முந்தைய தவறுகள் மன்னிக்கப்படுகின்றன. *(அபூ தாவூது 905, ஸஹீஹுத் தர்ஙீப் வத்தர்ஹீப் 228)*

3. ஹும்ரான் ﵁ அவர்கள் அறிவித்தது

أَنَّهُ رَأَى عُثْمَانَ بْنَ عَفَّانَ دَعَا بِوَضُوءٍ فَأَفْرَغَ عَلَى يَدَيْهِ مِنْ إِنَائِهِ فَغَسَلَهُمَا ثَلاَثَ مَرَّاتٍ ثُمَّ أَدْخَلَ يَمِينَهُ فِي الوَضُوءِ ثُمَّ تَمَضْمَضَ وَاسْتَنْشَقَ وَاسْتَنْثَرَ ثُمَّ غَسَلَ وَجْهَهُ ثَلاَثًا وَيَدَيْهِ إِلَى المِرْفَقَيْنِ ثَلاَثًا ثُمَّ مَسَحَ بِرَأْسِهِ ثُمَّ غَسَلَ كُلَّ رِجْلٍ ثَلاَثًا ثُمَّ قَالَ رَأَيْتُ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ

11

பலவீனர்களின் தொழுகையும் சமுதாயத்தின் வெற்றியில் அதன் தொடர்பும்

❀

சஅத் ﷺ அவர்கள் கூறியது, நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنَّمَا نَصَرَ اللهُ عَزَّ وَجَلَّ هَذِهِ الْأُمَّةَ بِضَعِيفِهَا بِدَعْوَتِهِمْ وَصَلَاتِهِمْ وَإِخْلَاصِهِمْ

அல்லாஹ் இந்தச் சமுதாயத்துக்கு அவர்களில் உள்ள பலவீனர்களின் பிரார்த்தனை தொழுகை, உளத்தூய்மை ஆகியவற்றினால் தான் உதவி செய்கிறான். (நசாயீ 4387, ஸஹீஹுத் தர்ஙீப் வத்தர்ஹீப் 6)

செல்வந்தர்களுக்கும் பலசாலிகளுக்கும் பதவிகளை உடையவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுங்கள். ஏழைகளை விட்டுவிடுங்கள் என்று சொல்லக்கூடிய சிந்தனைகளெல்லாம் இந்த நபிமொழி மூலம் சிறுமை அடைந்துபோகின்றன.

இதோ இப்போது நாம் பலவீனர்கள், வறியவர்கள், ஏழைகள், இறையச்சமுடையவர்கள் ஆகியோரை விட்டுவிட்டோம். தோல்வி, தாழ்வு, வீணாகுதல் ஆகியவற்றின் கசப்பை சுவைத்துக் கொண்டிருக்கிறோம். இந்தச் சமுதாயத்தின் வெற்றி என்பது இத்தகைய மக்களின் பிரார்த்தனை, தொழுகை, உளத்தூய்மை ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டதாக இருக்கும் நிலையில் இந்த நிலை எப்படி ஏற்படாமல் போகும்? (ஏற்படத்தான் செய்யும்.)

எனவே பலவீனர்கள் மற்றும் இறையச்சமுடையோருடன் சேர்ந்திருப்பதில் நாம் ஆர்வம் கொள்ள வேண்டும். அல்லாஹு ஸுப்ஹானஹு வதஅலாவின் உதவியைத் தேடுவோம். நம் நெருக்கடிகளிலிருந்தும் முஹம்மது ﷺ அவர்களின் சமுதாயத்துக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளிலிருந்தும் விடுவிக்கப்பட இந்த மக்களிடம் பிரார்த்திக்கும்படிக் கோருவோம்.

18

உள்ளச்சத்தின்[19] தடைகற்கள்

❀

1. அல்லாஹ்த்தஆலாவைச் சந்திப்பது மற்றும் அவனிடம் திரும்பிச் செல்வது குறித்த நம்பிக்கையில் பலவீனம்

அல்லாஹ் கூறுகிறான்:

وَاسْتَعِينُوا بِالصَّبْرِ وَالصَّلَاةِ وَإِنَّهَا لَكَبِيرَةٌ إِلَّا عَلَى الْخَاشِعِينَ الَّذِينَ يَظُنُّونَ أَنَّهُمْ مُلَاقُو رَبِّهِمْ وَأَنَّهُمْ إِلَيْهِ رَاجِعُونَ

மேலும், பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் (அல்லாஹ்விடம்) உதவிதேடுங்கள். எனினும், நிச்சயமாக இது உள்ளச்சம் உடையோருக்குத் தவிர (மற்றவர்களுக்குப்) பெரும்பாரமாகவே இருக்கும். அவர்கள் தங்கள் இறைவனை தாங்கள் சந்திக்கக்கூடியவர்களென்றும் நிச்சயமாக அவனிடமே தாங்கள் திரும்பிச் செல்லக்கூடியவர்களென்றும் உறுதியாக நம்புகிறார்கள். (குர்ஆன் 2:45, 46)

இந்த வசனங்களில் உள்ளச்சம் உடையவர்களின் தன்மைகளை அல்லாஹ் விளக்கியுள்ளான். அவர்கள் தனது இறைவனை சந்திக்கவிருப்பதையும் அவனிடமே திரும்பிச் செல்ல விருப்பதையும் நம்பக்கூடியவர்கள். இதுவே அல்லாஹ்வின் சந்திப்பையும் அவனிடம் திரும்பிச் செல்வதையும் பற்றிய அறிவாகும். இதிலே ஏற்படும் குறை உள்ளச்சத்தில் ஏற்படும் குறையாகும். இந்த நம்பிக்கை அவசியமான கணக்கைக் கணக்கிடுபவராக உம்மை மாற்றிவிடும். அப்போது, தொழுகை அழகாக அமையும் நடத்தை நேராகும்.

---

19 இந்தப் பாடத்தில் விரிவில்லாமலும் ஆதாரங்கள் காட்டாமலும் சில விசயங்களை கூறியுள்ளேன். முந்தைய பக்கங்களில் இந்த விசயங்கள் கடந்து சென்றுள்ளதே இதற்குக் காரணம்.

21

பள்ளிவாசல்களுக்கு நடந்து செல்வதின் சிறப்பு

❀

1. அபூ ஹுரைறா ﷺ அவர்கள் கூறியது, அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

صَلاَةُ الرَّجُلِ فِي الجَمَاعَةِ تُضَعَّفُ عَلَى صَلاَتِهِ فِي بَيْتِهِ وَفِي سُوقِهِ خَمْسًا وَعِشْرِينَ ضِعْفًا وَذَلِكَ أَنَّهُ إِذَا تَوَضَّأَ فَأَحْسَنَ الوُضُوءَ ثُمَّ خَرَجَ إِلَى المَسْجِدِ لاَ يُخْرِجُهُ إِلَّا الصَّلاَةُ لَمْ يَخْطُ خَطْوَةً إِلَّا رُفِعَتْ لَهُ بِهَا دَرَجَةٌ وَحُطَّ عَنْهُ بِهَا خَطِيئَةٌ فَإِذَا صَلَّى لَمْ تَزَلِ المَلاَئِكَةُ تُصَلِّي عَلَيْهِ مَا دَامَ فِي مُصَلَّاهُ اللَّهُمَّ صَلِّ عَلَيْهِ، اللَّهُمَّ ارْحَمْهُ وَلاَ يَزَالُ أَحَدُكُمْ فِي صَلاَةٍ مَا انْتَظَرَ الصَّلاَةَ

ஒருவர் தனது வீட்டிலும் கடை வீதியிலும் தொழுவதைவிட ஜமாஅத்துடன் தொழுவது இருபத்தி ஐந்து மடங்கு மதிப்பில் அதிகமானதாகும். உங்களில் ஒருவர் வுளூ செய்யும்போது அந்த வுளூவை அழகுறச் செய்து, தொழுகின்ற ஒரே நோக்கத்தில் பள்ளிவாசலுக்குச் சென்றால், அவர் பள்ளிவாசலுக்குச் செல்லும் வரை எடுத்து வைக்கும் ஒவ்வோர் எட்டுக்கும் அவருக்கு படித்தரத்தை அல்லாஹ் உயர்த்துகிறான்; ஒரு பாவத்தை அவரை விட்டு நீக்குகிறான். தொழுகையை எதிர்பார்த்து அவர் மஸ்ஜிதில் அமர்ந்திருக்கும்போது அவர் தொழுதுகொண்டிருப்பவராகவே கருதப்படுகிறார். தொழுத இடத்திலேயே அவர் இருக்கும் வரை அவருக்காக வானவர்கள், இறைவா! இவருக்கு கருணை புரிவாயாக! இவருக்கு அருள் புரிவாயாக! என்று பிரார்த்தனை செய்கிறார்கள். (புகாரீ 647)

மற்றோர் அறிவிப்பில்,

اللَّهُمَّ اغْفِرْ لَهُ اللَّهُمَّ ارْحَمْهُ اللَّهُمَّ تُبْ عَلَيْهِ مَا لَمْ يُؤْذِ فِيهِ مَا لَمْ يُحْدِثْ فِيهِ

சிறு தொடக்கு மூலம் வானவர்களுக்கு தொல்லை அளிக்காத வரை, இறைவா! இவரை மன்னப்பாயாக! இவரது பாவமன்

அவருக்கு அனுமதி வழங்கினார்கள். அம்மனிதர் திரும்பிச் சென்றபோது, அவரைக் கூப்பிட்டு நீர் தொழுகை அழைப்பைச் செவியேற்கிறீரா? என்று கேட்டார்கள். அதற்கவர், ஆம் என்று சொன்னார். அப்போது, நபியவர்கள் அப்படியானால் (தொழுகைக்கு வருவதன் மூலம்) அதற்குப் பதிலளிப்பீராக என்று கூறினார்கள். (முஸ்லிம் 653)

3. ஒரு ஹதீஸில் கூறப்பட்டிருப்பதாவது:

لَيَنْتَهِيَنَّ أَقْوَامٌ عَنْ وَدْعِهِمُ الْجُمُعَاتِ أَوْ لَيَخْتِمَنَّ اللهُ عَلَى قُلُوبِهِمْثُمَّ لَيَكُونُنَّ مِنَ الْغَافِلِينَ

ஜும்ஆத் தொழுகைகளை விடுவதிலிருந்து மக்கள் விலகிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், அல்லாஹ் அவர்களின் உள்ளங்கள்மீது முத்திரை வைத்து விடுவான். அதன் பின்பு அவர்கள் அலட்சியவாதிகளில் சேர்ந்துவிடுவார்கள். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ﷺ, முஸ்லிம் 865)

மேற்கண்ட ஆதாரங்கள் வாயிலாகத் தெரிய வருபவை:

1. ஜமாஅத் தொழுகை அவசியம்.

2. ஜமாஅத் தொழுகையை விட்டுவிட பார்வையற்றவருக்கு நபி ﷺ அவர்கள் அனுமதி வழங்கவில்லை. அப்படியானால் உடல் சுகம் உள்ளவர்களுக்கு எப்படி அனுமதி வழங்குவார்கள்?

3. ஜமாஅத் தொழுகையை விடுபவர் அவர் உள்ளத்தில் முத்திரை பதிக்கப்படும் என்றும் அலட்சியத்தன்மை உள்ளவராக ஆவார் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளார்.

4. தகுந்த காரணம் இன்றி ஜமாஅத் தொழுகைக்கு வராமலிருப்பது நயவஞ்சகத் தனத்தின் அடையாளங்களில் ஒன்றாகும்.

5. சிரமமான நிலைகளிலும் ஜமாஅத் தொழுகையில் கலந்து கொள்வதற்கு நபித்தோழர்கள் கடும் முயற்சி எடுத்துள்ளார்கள்.

தொழுகைக்கு முன்கூட்டியே செல்வதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

1. தொழுகைக்கு முன்கூட்டியே செல்வதின் சிறப்பு குறித்த ஆதாரங்களை நாம் படித்தறிவது.

2. இரவில் நீண்ட நேரம் விழித்திருக்காமல் சீக்கிரமாக தூங்கிவிடுவது, சிலர் இரவில் நீண்ட நேரம் விழித்திருந்துவிட்டு ஃபஜ்ரு தொழு